இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
புதன்கிழமை 22-01-2025

# தமிழ் உலகு

இந்தியாவில் எந்த மாநிலத்திலும் நடக்காத -

எந்த இந்திய மொழிகளிலும் நடக்காத - பன்னாட்டுப் புத்தகத் திருவிழாவை தொடர்ந்து மூன்று ஆண்டுகளாக நடத்தி வருகிறது தமிழ்நாடு அரசு. பள்ளிக் கல்வித் துறையின் தனித்துவமான முயற்சியால் இது நடத்தப்பட்டு வருகிறது. வேறு எந்த மொழிக்கும் இல்லாத சிறப்பை உருவாக்கித் தந்துள்ளார் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**" உலகைத் தமிழுக்கும்; தமிழை உலகுக்கும்"** (Bringing the World to Tamil; Taking Tamil to the World) **என்ற உன்னதமான நோக்கத்தோடு பன்னாட்டு புத்தகத் திருவிழா கொண்டாடப்படுகிறது.**

2023 ஆம் ஆண்டு 24 நாடுகள் பங்கெடுத்தன. 2024 ஆம் ஆண்டு 40 நாடுகள் பங்கெடுத்தன. இந்த ஆண்டு 60 நாடுகள் பங்கெடுத்துள்ளன. அதிலும் 34 நாடுகள் முதன்முதலாக பங்கெடுத்துள்ளன.

**2023 ஆம் ஆண்டில் 365 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தானது. 2024 ஆம் ஆண்டில் 752 ஒப்பந்தங்கள் கையெழுத்தானது. இந்த ஆண்டு நடைபெற்ற விழாவில் 1125 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகி உள்ளது. தமிழில் இருந்து அயலக மொழிகளுக்கு 1005, அயலக மொழிகளில் இருந்து தமிழுக்கு 120 என ஒப்பந்தங்கள் கையெழுத்தாகி உள்ளன. குறிப்பாக அரபிக் மொழிக்கு 33 ஒப்பந்தங்களும், பிரெஞ்ச் மொழிக்கு 32 ஒப்பந்தங்களும், மலாய் மொழிக்கு 28 ஒப்பந்தங்களும் கையெழுத்தாகியுள்ளன.**

"இந்தச் சாதனைக்கும், தமிழிலக்கியம் உலக அளவில் கவனம் பெறவும் நமது திராவிட மாடல் அரசின் மொழிபெயர்ப்பு நல்கையும் ஆதரவும் தான் காரணம் எனத் தமிழ் அறிவுலகம் பாராட்டுகிறது. ஞானபீடம் அல்ல, நம் எழுத்தாளர்கள் நோபல் பரிசே பெற உயர்வுள்ளுவோம்! இவ்வியத்தகு சாதனைக்காக மாண்புமிகு அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்களுக்கும் துறை அதிகாரிகளுக்கும் எனது பாராட்டுகள்!" என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மனந்திறந்து பாராட்டி இருக்கிறார்கள்.

உலகெங்கும் தமிழ் இலக்கியங்களை எடுத்துச்சென்று, தமிழ் மொழியின் சிறப்பினை பறைசாற்றும் வகையில், தமிழ்நாடு மொழிபெயர்ப்பு மானியமாக ஆண்டுதோறும் 3 கோடி ரூபாய் தமிழ்நாடு அரசால் வழங்கப்படுகிறது. இதன்மூலம், கடந்த இரண்டாண்டுகளில், 166 தமிழ் நூல்கள் 32 மொழிகளில் மொழிபெயர்ப்பு செய்யப்படுவதற்கு மானியம் வழங்கப்பட்டுள்ளது. உலகப் புகழ் பெற்ற பதிப்பகங்கள் இந்த நூல்களை வெளியிடுகின்றன. தமிழ் இலக்கியங்களை தமிழ்நாட்டு வரலாற்றை தமிழர் பண்பாட்டை ஆங்கில மொழி மொழிபெயர்ப்புகள் வாயிலாக உலகெங்கும் கொண்டு சேர்க்கும் பணியினை சிறப்பாகச் செய்து வருகிறது.

**தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் பதிப்பித்த 75 நூல்கள் மற்றும் மொழி பெயர்ப்பு மானியம் வாயிலாக மொழிபெயர்க்கப்பட்ட 30 நூல்களை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வெளியிட்டுள்ளார்கள்.**

உலகளாவிய விருதுகளையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்கள். சென்னை பன்னாட்டுப் புத்தகத் திருவிழா தூதர் விருது, உலகளாவிய தொலைநோக்கு டிஜிட்டல் புத்தக கண்காட்சி சிறப்பு விருது, பண்டைய தமிழ் இலக்கிய மேம்பாட்டு விருது, நவீன தமிழ் இலக்கிய மேம்பாட்டு விருது, கூட்டு வெளியீட்டு கூட்டாண்மை விருது, பன்னாட்டு மானியக் குழுவின் சிறப்பு விருது, புத்தக ஊக்குவிப்பு விருது, உலகளாவிய இலக்கிய ஆதரவிற்கான விருது ஆகிய விருதுகள் வழங்கப்பட்டுள்ளன. பல்வேறு நாட்டைச் சேர்ந்தவர்கள் இந்த விருதுகளைப் பெற்றார்கள்.

பன்னாட்டு புத்தகத் திருவிழாவின் மகத்தான சாதனை என்பது என்ன என்பதை பதிப்பாளர் ஆழி செந்தில் நாதன் முழுமையாகப் பட்டியலிட்டுள்ளார்.

" பன்னாட்டுக் காட்சிகளில் வழக்கமாக எப்போதும் காணப்படும் முகங்களோடு, பல புதிய முகங்கள் என அற்புதமாக இருந்தது அனுபவம். இந்த முறை ஆப்பிரிக்க நாடுகள் பலவும் அழைக்கப்பட்டிருந்தன. கானா, பெனின், எத்தியோப்பியா என பல நாடுகளின் 'தெற்கு நாடுகளின்' தாக்கம் அதிகமாகவே இருந்தது. முதல் ஆண்டில் 20+ நாடுகள், இரண்டாம் ஆண்டில் 40 + நாடுகள், மூன்றாம் ஆண்டில் 60+ நாடுகள்.

புதுதில்லி உலகப் புத்தகக் காட்சியும் கொல்கத்தா பன்னாட்டுப் புத்தகக் காட்சியும் பல பதிற்றாண்டுகளாக காணாத வளர்ச்சியை மூன்றாவது ஆண்டிலேயே நாம் கண்டிருக்கிறோம்... கடந்த இரண்டாண்டுகளாக நாம் ஆழ உழுதிருக்கிறோம். பயிர் அழகாக வளர்ந்துகொண்டிருக்கிறது.

தமிழ்ப் பதிப்பாளர்களும் பன்னாட்டுப் பதிப்பாளர்களும் இணைந்து பரபரப்பாக ஒப்பந்தங்களில் கையெழுத்திடும் காட்சிகளைப் பார்க்கும்போது எல்லாவற்றையும் மறந்து நமது மனமும் உற்சாகம் கொள்கிறது. தமிழ்நாடு வெல்கிறது. நமது உழைப்பு வீண்போகவில்லை என்கிற உணர்வு தெம்பளிக்கிறது.

**சொல்கிறேன் எழுதி வைத்துக்கொள்ளுங்கள். தமிழ்நாடு முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் தமிழ்நாட்டுக்கு ஆற்றிய பணிகள் என நீங்கள் ஒரு பெரும் பட்டியலைத் தொடுக்கமுடியும். அதில் சென்னை பன்னாட்டுப் புத்தகக் காட்சி முக்கியமான இடம் பெறும். அவரது ஆட்சிக் காலத்தில், வர்த்தகத்துக்கு அப்பால், முன்னெடுக்கப்படும் மிகப்பெரிய சர்வதேச உறவாடல் இதுதான். அதன் பொருள் ஆழமானது. பண்டைத் தமிழரின் உலக உறவுகளை மீட்டமைப்பது" என்று எழுதி இருக்கிறார் அவர்.**

**தமிழ்நாடு இதுவரை பார்க்காத காட்சியைப் பார்க்க வைத்துள்ளார் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். தமிழ் உலகு என்று இதுவரை சொல்லி வந்தோம். உண்மையில் தமிழை உலகமெல்லாம் கொண்டு சேர்த்திருக்கிறார் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.**

**வாழ்க தமிழ்!**

**வாழ்க தமிழ்நாடு முதலமைச்சர்!**

**அவரைத் தமிழும் வாழ்த்தும்!**



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை முகாம் அலுவலகத்தில், நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.கதிர் ஆனந்த் தனது பிறந்தநாளையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார். உடன் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் உள்ளார்.

## காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழக வளாகத்தில்

# திருமதி லக்ஷ்மி வளர்தமிழ் நூலகம் - அய்யன் திருவள்ளுவர் சிலை!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

**காரைக்குடி, ஜன. 22 -**

**காரைக்குடி அழகப்பா பல்கலைக் கழகத்தில் முன்னாள் ஒன்றிய அமைச்சரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ப.சிதம்பரம் அவர்களின் சொந்த நிதியில் ரூ.12 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள திருமதி லக்ஷ்மி வளர்தமிழ் நூலகம் மற்றும் அழகப்பா பல்கலைக் கழக முன்னாள் மாணவர்களின் நிதி பங்களிப்பில் ரூ.5 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள அய்யன் திருவள்ளுவர் திருவுருவச் சிலையை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.**

இதுபற்றிய விபரம் வருமாறு:-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (21.1.2025) சிவகங்கை மாவட்டம், காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழக வளாகத்தில் நடைபெற்ற விழாவில், முன்னாள் ஒன்றிய அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ப.சிதம்பரம் அவர்களின் சொந்த நிதியில் 12 கோடி ரூபாய் செலவில் அழகப்பா பல்கலைக் கழக வளாகத்தில் கட்டப்பட்டுள்ள திருமதி லக்ஷ்மி வளர்தமிழ் நூலகம் மற்றும் அழகப்பா பல்கலைக்கழக முன்னாள் மாணவர்களின் நிதி பங்களிப்பில் 5 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள அய்யன் திருவள்ளுவர் திருவுருவச் சிலை ஆகியவற்றை திறந்து வைத்தார்.

திருமதி லக்ஷ்மி வளர்தமிழ் நூலகம் செட்டிநாடு கட்டடக் கலையை பிரதிபலிக்கும் வகையில் 31 ஆயிரம் சதுர அடி பரப்பளவில், கீழ் தளம், தரைத் தளம் மற்றும் முதல் தளத்துடன் கட்டப்பட்டுள்ளது. கீழ் தளத்தில் கம்பர் நூலக அறை, தொல்காப்பியர் அரங்கமும், முதல் தளத்தில் திருவள்ளுவர், இளங்கோவடிகள் நூலக அறைகளும் இணையதள வசதியுடன் கூடிய மின் நூலகம், சிறு கூட்டரங்கமும் அமைக்கப்பட்டுள்ளன. நூலகத்தில் சுமார் ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட நூல்களை வைப்பதற்கான இடம் உள்ளது. மேலும், நூலகத்தில் மின்தூக்கி வசதியும், குளிர்சாதன வசதிகளும் செய்யப்பட்டுள்ளன. இச்சிறப்புமிக்க நூலகத்தை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்து, மாணவர்களின் பயன்பாட்டிற்காக அர்ப்பணித்தார்.

அழகப்பா பல்கலைக் கழக வளாகத்தில் உள்ள நிர்வாக தொகுதியின் (Administrative Block) முகப்பில், அழகப்பா பல்கலைக்கழக முன்னாள் மாணவர்களின் நிதி பங்களிப்பில் 5 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள அய்யன் திருவள்ளுவர் திருவுருவச் சிலையை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில், பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழாக் கலையரங்கக் கருத்தரங்கக் கூடத்திற்கு "வீறு கவியரசர் முடியரசனார் அரங்கம்" என்று பெயர் சூட்டப்பட்டது. மேலும், முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா தேசியக் கருத்தரங்க ஆய்வுக் கட்டுரைகள் தொகுப்பு நூலை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வெளியிட, அழகப்பா பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் பேராசிரியர் க.ரவி பெற்றுக் கொண்டார்.

அதனைத் தொடர்ந்து, முனைவர் கவிஞர் அண்ணாதாசன் அவர்கள் எழுதிய "தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பிள்ளைத்தமிழ்" என்னும் நூலை முன்னாள் ஒன்றிய நிதியமைச்சர் ப.சிதம்பரம் வெளியிட, அழகப்பா பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் பேராசிரியர் க.ரவி பெற்றுக் கொண்டார்.

இந்த விழாவில், ஒன்றிய முன்னாள் அமைச்சர் ப.சிதம்பரம், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, நிதி மற்றும் மனித வள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர்.பெரிய கருப்பன், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், பால்வளத்துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜ கண்ணப்பன், உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், நாடாளுமன்ற உறுப்பினர் கார்த்தி ப. சிதம்பரம், சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.மாங்குடி, திருமதி தமிழரசி, டாக்டர் வி.முத்துராஜா, தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார், கவிப்பேரரசு வைரமுத்து, மாநில திட்டக்குழு துணைத் தலைவர் பேராசிரியர் ஜெ.ஜெயரஞ்சன், சிவகங்கை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி ஆஷா அஜித், அழகப்பா பல்கலைக் கழகத்தின் துணை வேந்தர் பேராசிரியர் க.ரவி, பதிவாளர் முனைவர் அ.செந்தில்ராஜன் மற்றும் பல்கலைக் கழக ஆட்சிக்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

## முதலமைச்சரின் திட்டத்தால்

# இந்தியாவுக்கு பெருமைச் சேர்க்கும் வகையில் தமிழ்நாட்டின் தொழில் கட்டமைப்பு உள்ளது!

## டாவோஸ் நகரில் நடைபெறும் உலக பொருளாதார மன்றத்தில் அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா உரை!

டாவோஸ், ஜன. 22 -

ஸ்விட்சர்லாந்து நாட்டின் டாவோஸ் நகரில் நடைபெறும் உலக பொருளாதார மன்றத்தின் கூட்டத்தில் இந்திய அரங்கை தொழில்துறை அமைச்சர் - முனைவர் டி.ஆர்.பி.ராஜா தொடங்கி வைத்தார்.

மகாராஷ்டிரா முதல்வர் தேவேந்திர பட்னவிஸ் உள்ளிட்டோர் பங்கேற்ற இந்த நிகழ்வில் பேசிய அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, "உலகளவில் தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சி, புத்தாக்கம் மற்றும் தலைமைத்துவத்தை வெளிப்படுத்தும் பெருமைமிக்க தருணமாக இது அமைந்துள்ளது. இது உலகளாவிய பொருளாதார அரங்கில் இந்தியாவின் இருப்பை வலுப்படுத்தும் மற்றொரு முக்கிய படியாகும். இந்தியாவின் பொருளாதார வளர்ச்சியில் தமிழ்நாடு முக்கிய பங்கு வகிக்கிறது. இது ஒருங்கிணைந்த வளர்ச்சியின் அடையாளம்.

முதலீடுகளை ஈர்ப்பதில் மாநிலங்களுக்கு இடையே போட்டி இருப்பதில் பிரச்சினை இல்லை. வேறு நாடுகளுக்கு முதலீடுகள் நழுவிச்சென்றுவிட கூடாது.

இந்தியாவில் மின் ஊர்திகள் தயாரிப்பில் தமிழ்நாடு முன்னிலை வகிக்கிறது. குறிப்பாக, இருசக்கர மின் ஊர்திகள் அதிக அளவில் உற்பத்தி ஆகிறது. இந்தியாவின் தொழிற்சாலைகளில் உள்ள பெண் பணியாளர்களின் எண்ணிக்கையில் 43 சதவீதம் தமிழ்நாட்டின் பெண் பணியாளர்கள் என்பது பெருமைக்குரியது. கல்வியில் பெண்களுக்கு கொடுக்கப்பட்ட முக்கியத்துவம் மூலமாக தமிழ்நாடு இதை சாத்தியப்படுத்தி இருக்கிறது. முதலமைச்சரின் திட்டத்தால் கல்லூரி மாணவர்கள் மாணவிகள் பெரிய நிறுவனங்களில் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுத் துறையில் ஈடுபட்டு தொழில் வளர்ச்சியில் முக்கிய பங்காற்றுகின்றனர்.

இந்தியாவுக்கு பெருமைச் சேர்க்கும் வகையில் தமிழ்நாட்டின் தொழில் கட்டமைப்பு விளங்குகிறது" என்று தெரிவித்தார்.





ஸ்விட்சர்லாந்து நாட்டின் டாவோஸ் நகரில் நடைபெறும் உலக பொருளாதார மன்றத்தின் கூட்டத்தில் இந்திய அரங்கை தொழில்துறை அமைச்சர் – முனைவர் டி.ஆர்.பி.ராஜா தொடங்கி வைத்தார்.